# புதிய வரலாறு படைக்கும் நெடுஞ்சாலைத் துறை!

## முதல் பக்கத் தொடர்ச்சி

ரூ.95.21 கோடி மதிப்பீட்டில் மேடவாக்கம் சாலை சந்திப்புகளை இணைக்கும் வகையில் தாம்பரத்திலிருந்து வேளச்சேரி செல்லும் பாலப் பகுதி.

ரூ.53.12 கோடி மதிப்பீட்டில் மதுரை-தொண்டி சாலை மற்றும் மதுரை சுற்றுச் சாலை சந்திப்பு பல்வழிச்சாலையில் மேம்பாலம்.

ரூ.20 கோடியில் சென்னையில் இந்திரா நகர் சந்திப்பில் 'U' வடிவிலான மேம்பாலம்!

ரூ.140.49 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர்- உக்கடம் ஆத்துப்பாலத்தில் சாலை மேம்பாலம் மற்றும் ரூ.265.44 கோடி மதிப்பில் உக்கடம்- ஆத்துப்பாலம் நீட்சிப்பணி ஆகிய சாலை மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**ரூ.1134.01 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 29 இரயில்வே மேம்பாலங்கள்/ இரயில்வே கீழ்பாலங்கள்**

ரூ.52.98 கோடி மதிப்பீட்டில் அன்னனூர் அருகில் இரயில்வே மேம்பாலம்.

ரூ25.74 கோடி மதிப்பீட்டில் கடம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் கடம்பத்தூர்-திருவாலங்காடு இரயில் நிலையங்களுக்கிடையில் இரயில்வே மேம்பாலம்.

சென்னை-பொன்னேரிக்கரை காஞ்சிபுரம் சாலையில் ரூ.59.63 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.37.12 கோடி மதிப்பீட்டில் ஊரப்பாக்கம் அருகில் வண்டலூர் கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.

ரூ.20.96 கோடி மதிப்பீட்டில் ஒலக்கூர் பீடர் இரயில்வே மேம்பாலம்!

கடலூர்- சித்தூர் சாலையில் ரூ.22.63 கோடி மதிப்பீட்டில் திருவெண்ணைநல்லூர் பரிக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம்.

பாண்டி- கிருஷ்ணகிரி சாலையில் ரூ.38.74 கோடி மதிப்பீட்டில் தண்டரை திருவண்ணாமலை இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்.

பொள்ளாச்சி- பாலக்காடு சாலையில் ரூ.48.48 கோடி மதிப்பீட்டில் பொள்ளாச்சி-கிணத்துக்கடவு இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்.

பெருங்களத்தூர் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியில் ரூ.37.00 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டிலிருந்து- சென்னை செல்லும் பாலப்பகுதிப் பணி, ரூ.24.80 கோடி மதிப்பீட்டில் சீனிவாச ராகவன் தெரு பாலப்பகுதிப் பணி, ரூ.60.13 கோடி மதிப்பீட்டில் சென்னையிலிருந்து செங்கல்பட்டு செல்லும் பாலப்பகுதிப் பணி முதலிய 29 இடங்களில் இரயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலங்களாகவும். கீழ்பாலங்களாகவும் அமைக்கப்பட்டு போக்குவரத்து இனிதாக நடைபெற வழிவகுத்துள்ளது திராவிட மாடல் அரசு.



**நடை மேம்பாலம்**

தாம்பரத்தில் ரூ.6.29 கோடி மதிப்பீட்டில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

**ரூ.4061.71 கோடியில் ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைப் பணிகள்**

ரூ.3.909.16 கோடி மதிப்பீட்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் ஆண்டுத் திட்டத்தின் கீழ் 88 சாலை மற்றும் 16 பாலப்பணிகளும், ரூ.152.55 கோடி மதிப்பீட்டில் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் தேசிய நெடுஞ்சாலையில் 8 சாலைப்பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**நம்ம சாலை செயலி**

சாலைகளில் கண்டறியப்படும் பள்ளங்கள் குறித்து பொதுமக்கள் உதவியுடன் அறிந்து சரி செய்திட நம்ம சாலை செயலி என்னும் புதிய செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலி வழியாகப் பொதுமக்கள் சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்கள் குறித்துத் தகவல் தெரிவிக்க முடியும். அதன் மூலம் சாலைப் பகுதிகளில் ஏற்பட்ட பள்ளங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் சரி செய்யப்படுகின்றன.

**பொறியாளர்களுக்குப் பயிற்சிகள்**

வளர்ந்து வரும் புதிய புதிய தொழில்நுட்பங்களைக் களத்தில் கடைப்பிடித்து சாலை - பாலப்பணிகள் சிறப்பாக நடைபெறப் பொறியாளர்களுக்கும். இதர அலுவலர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், 379 பொறியாளர்களுக்கும், 112 தொழில்நுட்பம் சாரா அலுவலர்களுக்கும், விரிவான பயிற்சித் திட்டத்தின் (CTP) கீழ் 2,881 பொறியாளர்களுக்கும், மற்றும் 832 தொழில்நுட்பம் சாரா அலுவலர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 368 பொறியாளர்களுக்கும், 40 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பொறியாளர்களுக்கும். 41 துணை ஆட்சியர்கள் (பயிற்சி) மற்றும் தலைமைச் செயலகத்தின் 134 பதிவு அதிகாரிகளுக்கும் இப்பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டங்கள்**

நாமக்கல், செங்கல்பட்டு, நீலகிரி, தேனி, மதுரை, தூத்துக்குடி சிவகங்கை. ராமநாதபுரம், ஈரோடு, கோயம்புத்தூர் விருதுநகர் கரூர். திருப்பூர். திருவாரூர். நாகப்பட்டினம் தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர் திண்டுக்கல். திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 22 மாவட்டங்களில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன

454 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள். நெடுஞ்சாலைத் துறையின் சாலைப் பாதுகாப்புப் பொறியாளர்கள் மூலம் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே சாலைப் போக்குவரத்து குறித்து விழிப்புணர்வு வளர்க்கப்பட்டுள்ளது.

**919 புதிய பணி நியமனங்கள்**

84 உதவிப்பொறியாளர்கள், 416 இளநிலை வரைதொழில் அலுவலர்கள் 182 உதவியாளர்கள். 3 தணிக்கை உதவியாளர்கள், 67 இளநிலை உதவியாளர்கள், 6 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் நிலை-3 மற்றும் 49 தட்டச்சர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகவும். 4 உதவியாளர்கள் விளையாட்டு ஒதுக்கீட்டின் மூலம் நேரடியாகவும், 3 உதவி வரைவாளர், 45 இளநிலை உதவியாளர்கள், 9 தட்டச்சர்கள், 15 பதிவுரு எழுத்தர் மற்றும் 36 அலுவலக உதவியாளர்கள் கருணை அடிப்படையிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஆக 919பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**நடைபெற்று வரும் முக்கியப் பணிகள்**

கோயம்புத்தூர் மேற்குவட்டச்சாலை, மன்னார்குடி கட்டம்-1. அம்பாசமுத்திரம், திருச்செங்கோடு (I & II) பவானி (கட்டம் 1) நாமக்கல் (கட்டம் II & கட்டம் -III), பொள்ளாச்சி மேற்கு புறவழிச்சாலை, அருப்புக் கோட்டை மேற்கு புறவழிச்சாலை, கமுதி சிவகங்கை கட்டம் I, உத்திரமேரூர், துறையூர் கட்டம் II, தாம்பரம் கிழக்குப் புறவழிச்சாலை (இரு பகுதிகள்) மற்றும் திருப்போரூர் / கேளம்பாக்கம் ஆகிய பகுதிகளில் புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.944.21 கோடி மதிப்பீட்டில் 812.8 கி.மீ நீளமுள்ள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்தும் பணிகள்

ரூ.331 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 373 சாலை பாதுகாப்புப் பணிகள். ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.8,076 கோடி மதிப்பீட்டில் 2,264 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் ரூ.694 கோடி மதிப்பில் 69 பாலம் / சிறுபாலப் பணிகள் ரூ.763.80 கோடி மதிப்பீட்டில் 134 தரைப்பாலங்களை உயர்மட்ட பாலங்களாக மாற்றும் பணிகள் ரூ.375.32 கோடி மதிப்பீட்டில் நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ் 32 உயர் மட்டப் பாலங்கள், ரூ.596.64 கோடி மதிப்பீட்டில் மாநில நிதி திட்டத்தின் கீழ் 19 உயர்மட்டப் பாலங்கள்.

ரூ.1791.23 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிப்பாளையம் வரை உயர்மட்ட சாலை அமைக்கும் பணிகள்.

ரூ.621 கோடி மதிப்பீட்டில் சென்னையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்டச் சாலை அமைக்கும் பணிகள்

ரூ.25.52 கோடி மதிப்பீட்டில் படப்பையில் சாலை மேம்பாலம் ரூ.190.40 கோடி மதிப்பீட்டில் மதுரையில் கோரிப்பாளையம் சந்திப்பில் சாலை மேம்பாலம். ரூ.150.28 கோடி மதிப்பீட்டில் மதுரையில் மதுரை-தொண்டி சாலையில் சாலை மேம்பாலம்.

ரூ.2,105.49 கோடி மதிப்பீட்டில் 41 இரயில்வே மேம்பாலங்கள்/ இரயில்வே கீழ்பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.27.5 கோடி மதிப்பீட்டில் டைடல் பார்க் சந்திப்பில் "U" வடிவிலான மேம்பாலம் கட்டும் பணிகள் என பல்வேறு முக்கிய பாலங்கள் கட்டும் பணிகள் நடைபெறுகின்றன.

**ரூ.590.51 கோடியில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டப் பணிகள்**

ரூ.60.69 கோடி மதிப்பீட்டில் சென்னையில் சர்தார் படேல் சாலையுடன் ராஜீவ்காந்தி சாலை இணையும் மத்திய கைலாஷ் சந்திப்பில் சாலை மேம்பாலம்.

ரூ.314.48 கோடி மதிப்பீட்டில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் ரூ45.50 கோடி மதிப்பீட்டில் மடிப்பாக்கம் அருகே வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணி.



ரூ.30.67 கோடி மதிப்பீட்டில் நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு, செந்தில் நகர் சந்திப்பு ஆகிய இடங்களில் 2 நடை மேம்பாலங்கள்.

ரூ.139.17 கோடி மதிப்பீட்டில் உள்வட்டச் சாலையிலுள்ள இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்தும் பணி முதலியன சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டப் பணிகளாக நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் இத்தகைய பல சாலைத் திட்டங்கள், மேம்பாலப் பணிகளால் மற்ற துறைகளைப் போலவே இந்தியாவில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையிலும் சிறந்த மாநிலம் என புதிய வரலாறு படைத்து வருகிறது.

---

### இன்னும் பல உயரங்களைத் தொட

# முத்தமிழ்ச் செல்வியை வாழ்த்துகிறேன்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

*சென்னை, ஜூன் 24-*

*"மலையேற்ற வீராங்கனை முத்தமிழ்ச்செல்வி இன்னும் பல உயரங்களைத் தொட வாழ்த்துகிறேன்" என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.*

*இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-*

**ஏழு கண்டங்களில் உள்ள ஏழு உயரமான மலைகளில் ஏறி சாதனை படைத்திருக்கிறார் சகோதரி முத்தமிழ்ச்செல்வி.**

**உயிரைப் பணயம் வைத்து இச்சாதனையை சாத்தியமாக்கி இருக்கும் அவருக்கு என் பாராட்டுகள்.**



**ஒவ்வொரு மலையேற்றத்திற்கு முன்பும் நம்மை சந்தித்து அவரது அடுத்தடுத்த மலையேற்றம் குறித்த தகவல்களையும் அதில் உள்ள சவால்களையும் பகிர்ந்து கொள்வார். அவருடைய வெற்றிப்பயணத்திற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் துணை நின்று வருகிறது என்பதில் பெருமை கொள்கிறோம்.**

**தங்கை முத்தமிழ்ச்செல்வி இன்னும் பல உயரங்களை தொட அவரைப்போல பலரை உருவாக்க என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.**

*இவ்வாறு அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.*

---

### புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி -

# திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய மின்மாற்றிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

*புதுக்கோட்டை, ஜூன் 24-*

*புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்மாற்றிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 19.06.2025 அன்று துவக்கி வைத்தார்.*

*பின்னர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலன் மீது அதிக அக்கறைகொண்டு பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், பொதுமக்களுக்கு தேவையான சாலை வசதி, சுகாதார வசதி, மின் வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன்படி பொன்னமராவதி மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்மாற்றிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*

*அதன் அடிப்படையில், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், காரையூர் ஊராட்சி, பூவாளூர் கிராமத்திலும், நகரப்பட்டி ஊராட்சி, அம்மாபட்டி கிராமத்திலும், சுந்தரம் கிராமத்திலும், சுந்தரசோழபுரம் கிராமத்திலும் மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றியம், ராராபுரம், ராங்கியம், துர்வாசபுரம், கண்ணனி.புதுவயல் மற்றும் தெற்குதாளம் பட்டி ஆகிய கிராமங்களிலும் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்மாற்றிகள் திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்கள், விவசாயிகள், வணிக நிறுவனங்களுக்கு நிறைவான மின்விநியோகம் வழங்கப்படும்.*

*எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சிகளில், செயற்பொறியாளர் (மின்சார வாரியம்) எம்.ஆனந்தாய், பொன்னமராவதி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெங்கடேசன், பாலசுப்ரமணியன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் சண்முகசுந்தரம் மற்றும் கணேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

---



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி அன்னூரில் மறைந்த அ.தி.மு.க. வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமுல் கந்தசாமி அவர்களின் திருவுருவப்படத்திற்கு மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி மலர் தூவி மரியாதை செலுத்தி அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் நா.தினேஷ்குமார், மாவட்டச் செயலாளர்கள் தொண்டாமுத்தூர் அ .ரவி கோவை வடக்கு, தளபதி முருகேசன் கோவை தெற்கு, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, ஒன்றிய கழக செயலாளர் பழனிச்சாமி, பொறுப்பாளர் தனபால், பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர் இரா.பரமேஸ்வரன், மாவட்ட கவுன்சிலர் இ.ஆனந்தன், கழகப் பொறியாளர் அணி துணைச் செயலாளர் அம்பாள் எஸ்.ஏ.நந்தகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலத்தில் ரூ.119 லட்சம் மதிப்பீட்டில் 96 வது வார்டுக்குட்பட்ட பழனியப்பா லே அவுட், குருசாமி பிள்ளை வீதி, பெரியசாமி சேர்வை வீதியில் புதிதாக தார்ச் சாலை மற்றும் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ஆரம்ப சுகாதார நிலையம் மேம்பாட்டு பணி, மழை நீர் வடிகால் மற்றும் சிறு பாலம் கட்டும் பணிகளை கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் துவக்கி வைத்தனர். இதில் துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், தெற்கு மண்டலத்தலைவர் ரெ.தனலட்சுமி, உதவி ஆணையர் குமரன், செயற்பொறியாளர் இளங்கோவன், உதவி செயற்பொறியாளர் கனகராஜ் குறிச்சி பகுதி செயலாளர் காதர், பொதுக்குழு உறுப்பினர் குறிச்சி பிரபாகரன், வார்டு செயலாளர் குணசேகரன், மாமன்ற உறுப்பினர்கள் குணசேகரன், அஸ்லாம்பாஷா, அப்துல் காதர், உதயகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.